D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.74/2018

**P.W**.5

| | |
|---|---|
| Name | : திருமதி.சீதாலட்சுமி |
| Father/Husband Name | : திரு.ராமு |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது பச்சம்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி ராமு என் கணவர். நிர்மலா என் அம்மா ஆவார். சாடசி சின்னசாமி எனது அப்பா. அவர் தற்போது இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

2) கடந்த 2017 ம் வருடம் ஒரு நாள்சுமார் மாலை 6.00 மணியளவில் என் அப்பா சின்னசாமி கோவில் அருகே இருந்தபோது எதிரி யோகநந்தம் இரும்பு ராடால் என் அப்பாவை தலையில் அடித்துவிட்டார். உடன் இருந்த மற்ற எதிரிகள் என் அப்பாவை கையால் அடித்துவிட்டார்கள். நாங்கள் ஆம்புலன்சு மூலம் என் அப்பாவை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

சம்பவத்தன்று இரவே போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். சம்பவத்தன்று எங்கள் ஊரில் கோவில் திருவிழா நடந்தது. அதில் சறுக்கு மரம் ஏறினார்கள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும், எங்கள் குடும்பத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது அங்கு சுமார் 50 பேருக்கு மேல் இருந்தார்கள். என் அப்பா சறுக்கு மரம் ஏறினார் என்றால் சரியல்ல. சறுக்கு மரம் ஏறி கீழே விழுந்ததில் என் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டது என்றாலும் எதிரிகள் அவரை தாக்கவில்லை என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக என் அப்பாவிற்கு மேற்கண்டவாறு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது தவறான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.74/2018

**P.W**.6

| | |
|---|---|
| Name | : **திரு.மோகன்** |
| Father/Husband Name | : திரு.சின்னசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது கருக்காமலை கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் ராமு என் மாமா ஆவார். நிர்மலா எனது அம்மா ஆவார். சாட்சி சீத்தாலட்சுமி என் தங்கை ஆவார். சாட்சி சின்னசாமி என் அப்பா ஆவார். தற்போது அவர் இறந்துவிட்டார். எதிரிகளை எனக்கு தெரியும்**

**2) கடந்த 2017 ம் வருடம் ஒரு நாள் எங்கள் ஊரில் உள்ள கங்கையம்மன் கோவில் திருவிழா நடந்தது. அப்போது சறுக்கு மரம் ஏறினார்கள். அந்த சமயத்தில் என் அப்பா சின்னசாமி அங்கு இருந்தார். அப்போது ஏற்பட்ட தகராறில் ஆஜர் எதிரிகள் இரும்பு ராடால் யோகநந்தம் என்பவர் என் அப்பாவை கை, கால், தலையில் அடித்துவிட்டார். மற்ற எதிரிகள் கையால் அடித்துவிட்டார்கள். பிறகு ஆம்புலன்சு வரவழைத்து என் அப்பாவை**

செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

சம்பவத்திற்கு அடுத்த நாள் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். போலிஸ் விசாரணையில் சறுக்கு மரம் ஏறியபோது என் தம்பியை காலை பிடித்து இழுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலிஸ் விசாரணையில் யோகநந்தம் என் அப்பாவை இரும்பு ராடால் அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். சம்பவத்தின் போது அங்கு 50 பேருக்கு மேல் இருந்தார்கள். அப்போது என் அப்பா சறுக்கு மரம் ஏறினாரா என்றால் இல்லை. சறுக்கு மரம் ஏறி கீழே விழுந்ததில் என் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டது என்றாலும் எதிரிகள் அவரை தாக்கவில்லை என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக என் அப்பாவிற்கு மேற்கண்டவாறு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது தவறான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.